தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) திருத்தச் சட்ட முன்வடிவு தொடர்பாக முழுத் தகவல்கள் தரக் கோரிக்கை.

(முற்பகல் 11.30)

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு விஷயம் பற்றி தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மூலச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகிற போது உறுப்பினர்கள் அதிலே கலந்து கொண்டு சிறப்பாகப் பேச வேண்டும். எங்களுக்கு திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட அந்த பிரிவுக்கு மட்டுந்தான் திருத்தங்களையும் எக்ஜிஸ்டிங் செக்‌ஷனையும் தருகிறார்களே தவிர என்டையர் போர்ஷன்களையும் தருவதில்லை. நான் நல்ல எண்ணத்தின் அடிப்படையில், சிறப்பாக உறுப்பினர்கள் பணியாற்ற வேண்டுமென்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செரீப் சம்பந்தப்பட்ட சட்ட முன் வடிவைப் பொறுத்த வரையிலே அவருடைய கடமைகள் என்ன என்ன, வேலைகள் என்ன என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கேட்டார்கள், எங்களுக்கு கொடுக்கப்பட்டதிலே அந்தத் தகவல்கள் எல்லாம் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிக் கொடுக்கப்பட மாட்டாது. புரகிபிஷன் ஆக்டிற்கு அமெண்ட்மெண்ட் வருகிறது என்றால் அது சம்பந்தப்பட்டதை மட்டும் தான் கொடுப்பார்கள். என்டையர் டீடெய்ல்ஸும் கிடைக்காது. சம்பந்தப்பட்ட ஒரு செக்‌ஷனைப் பற்றித்தான் விவரம் கொடுக்கப்படும். எதற்கு அமெண்ட்மெண்ட் வருகிறதோ அதைத்தான் கொடுப்பார்கள். மற்றபடி பிரியாம்பிள் போன்றவற்றையெல்லாம் லைப்ரரியிலே போய் உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(ஈ) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களால் 19—12—1982-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1982-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1982) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் முறையே வழிமொழியப் பெற்றது.